REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 17உ வெள்ளி (1—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 18உ சனி (2—7—55) [இதழ் 15

'சமமான வேலைக்கு சமமான கூலி கொடு'

ஆமதாபாத் பெண் பீடித் தொழிலாளர் கோரிக்கை

ஆமதாபாத், ஜூன் 30—

'சமமான வேலைக்கு சமமான கூலி வேண்டும்' என்று சுமார் 700 பீடித் தொழிலாளர்களான பெண்கள் கோரிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

மாவட்ட நீதிபதி முன்னிலையில், சுமார் 30 தொழிலாளப் பெண்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

தேபர் கூற்று பொய்யாகிறது!

திரு—கொச்சி அரசியல் குழம்புகிறது!

பனம்பள்ளி பதவிக்கு ஆபத்து?

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர புரட்சி சோஷலிஸ்டு முடிவு

எர்ணாகுளம், ஜூன் 30—

'திரு-கொச்சி மாநிலத்தில் உறுதியான ஒரு மந்திரி சபை அமைவது என்றோ?'—என்ற ஏக்கத்தையும், அச்சத்தையும் மக்களுக்கு ஊட்டும் வகையில் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மிகச் சிறுபான்மையினரான ம. சோ. கட்சியினரை ஆதரித்து, பட்டம் தாணுவை முதன் மந்திரியாக்கி 'முட்டு'க் கொடுத்துக் காப்பாற்றிவந்து, பின்னர், 'நேசம்' முறிந்ததும் அவரைக் கீழே தள்ளிவிட்டு, பதவிப் பீடத்தில் அமர்ந்தது திரு—கொச்சி காங்கிரஸ் கட்சி; பனம்பள்ளி கோவிந்த மேனன் முதன் மந்திரியானார்.

ஆனல், அவர் பதவி ஏற்று நான்கு மாதங்கள்கூட நிறைவேறவில்லை; அவர் பதவிக்கு இப்போது 'வேட்டு' வைத்து மந்திரி சபையை வீழ்த்த முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஒன்பது சட்டசபை உறுப்பினர் கொண்ட புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியினர், வரும் செப்டம்பர் திங்களில் சட்டசபை கூடும்போது, மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கட்சித் தலைவர் ஸ்ரீகண்டன் நாயர், தமது கட்சி, சட்டசபை உறுப்பினர்களுக்கு அத்தகைய ஒரு தீர்மானம் கொண்டுவருவதற்கு அதிகாரமளித்திருப்பதாகக் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரசிடம், பனம்பள்ளி மந்திரி சபை பாரபட்சமாக நடந்துகொள்வதாக புரட்சி சோஷலிஸ்டுகள் குற்றம் கூறுகின்றனராம்.

சாவாராவில் உள்ள திருவாங்கூர் கனிப் பொருள் தொழிலாளர்கள் கடந்த 26 நாட்களாக நடத்திவரும் வேலை நிறுத்தத்தைக் குறிப்பிட்டு, 'இந்தச் சம்பவம் ஒன்றே இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் மீது சர்க்கார் பாரபட்சமாக நடந்துகொள்வது என்பதற்குப் போதுமான சான்றாகும்,' என்று, புரட்சி சோஷலிஸ்டுகள் கூறுகின்றனர்.

117 பேர் கொண்ட சட்டசபையில் கம்யூனிஸ்டுகளும், புரட்சி சோஷலிஸ்டுகளுமாக 40 பேர்கள் உள்ளனர். 15 ம. சோ. கட்சி உறுப்பினர்களும்கூட காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிராக வாக்களிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

12 பேர் கொண்ட திரு—தமிழகக் காங்கிரசின் நிலை, அப்பொழுது என்னவாயிருக்கும் என்று தெரியாவிட்டாலும், அவர்கள் காங்கிரசை ஆதரித்தாலும்கூட பனம்பள்ளி மந்திரிசபை வீழ்வது நிச்சயம் என்று கூறப்படுகிறது.

விசாரணை நடத்துக!

சர்க்காருக்கு நகரசபை கோரிக்கை

பம்பாய் நகரில் உள்ள பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்கள் கிடைக்காமல் இருப்பதற்கான காரணங்கள் குறித்து மாநில சர்க்கார் விசாரணை நடத்த வேண்டுமென்று பம்பாய் நகரசபை, தீர்மானம் ஒன்றின் மூலம் கோரிக்கை வெளியிட்டிருக்கிறது.

இதுபற்றி விசாரணை நடத்துவது மட்டுமல்லாமல், இனிமேலும் காலங்கடத்தாமல் உடனடியாகப் பாடப்புத்தகங்கள் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் சர்க்கார் மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் மந்திரி சபைக் குழப்பம் கூடுகிறது!

லஞ்சக் குற்றத்துக்காளான ஜெகத்நாராயணனை வெளியேற்ற முயற்சி!

காங்கிரஸ் கட்சியினரே கையொப்ப வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்!

அமிர்தசரஸ், ஜூன் 29—

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு, காங்கிரஸ் மேலிடத்தால் 'நிரபராதி' என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பஞ்சாப் கல்வி இலாகா மந்திரியான லாலா ஜெகத் நாராயணனை மந்திரி சபையிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக பஞ்சாப் சட்ட சபை காங்கிரஸ் உறுப்பினர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

அவர்கள், சட்டசபை அங்கத்தினர்களிடம் அது பற்றி கையெழுத்து வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது; ஏற்கனவே இருபது அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கையெழுத்து இயக்கம், காங்கிரஸ் கட்சிக்குள், பதவிக்காக நடத்தப்படும் சண்டையின் 'புதியவகை' என்றும் சிலர் கூறுகின்றனர் எனத் தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வேலை நிறுத்தத்திற்கு பல்லாயிரம் தொழிலாளர் ஆயத்தம்

ஆட்குறைப்பு முயற்சியின் எதிரொலி?

கிர்க்கி வெடிமருந்து உற்பத்தி தொழிலாளர் நடவடிக்கை

பூனா, ஜூன் 29—

கிர்க்கியில் உள்ள வெடிமருந்து (குண்டுகள்) தயாரிப்புத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் சங்கம், அங்கு ஆட்குறைப்பு செய்யப்படுமானல் அதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு செயற்குழுவை நியமித்துள்ளதாகத் தெரிகிறது.

தொழிற்சாலை நிர்வாகிகள், எந்த ஒரு தொழிலாளிக்கும் வேலை நீக்க 'நோட்டீஸ்' தந்தால் அதை எதிர்ப்பதற்காக வேலை நிறுத்தத்தில் தொழிலாளரை ஈடுபடுத்துவதென நிர்வாகக் குழு கூறியிருப்பதாகத் தெரிகிறது.

சுமார் 2000 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவதென நிர்வாகிகள் திட்டமிட்டிருப்பதாக தொழிற்சங்கச் செயலாளர் கூறியுள்ளாராம். அந்த 2,000 தொழிலாளர்களையும் வேலையிலிருந்து துரத்திவிடுவதற்கு முதற்படியாக நிர்வாகிகள், அவர்களை, வாரம் மாற்றி வாரம் கட்டாயமாக விடுமுறையில் அனுப்பிவருகிறார்கள் என்றும், அந்தச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து தாங்களாகவே வெளியேறும் இந்தியர்கள்

எண்ணிக்கை உச்சநிலை எட்டுகிறது

திங்கள்தோறும், இலங்கையிலிருந்து சுமார் 1,500 பேர் வீதம் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

கடந்த மே திங்களுடன் முடிந்த எட்டு மாத காலத்தில் 14,838 பேர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கை அதிகாரிகள் கணக்குப்படி 64,000 பேரும், இந்தியத் தூதுவராலய மதிப்பீட்டின்படி சுமார் 70,000 பேர்களும் 1949—54-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியேறியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த எட்டு மாதங்களில் வெளியேறியோரில் 4,823 பேர்களுக்கு இலங்கை சர்க்கார் வெளியேற்ற 'நோட்டீஸ்' கொடுத்ததாகவும், எஞ்சிய 10,013 பேர்கள் தாங்களாகவே இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியாவில் குடியேற எண்ணினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து தாங்களாகவே வெளியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதினின்றும், 'இலங்கையில தங்களுக்கு நிலையான வாழ்வு கிடைக்காது' என்ற அச்சத்தை அவர்களுக்கு ஊட்டும் நடைமுறைகள் இருக்கின்றன என்பதைத்தான் குறிப்பிடுகிறது என பார்வையாளர்கள் கருதுகின்றனராம்.

மீண்டும் 'டாய்'?

பாகிஸ்தான் பிரதமர் முகமதலியுடன் தமது கட்சி ஒத்துழைக்கும் என்[illegible] உறுதி அளிக்கவில்லை என்று பஸ்லுல் ஹக் கூறியிருக்கிறார்.

இதனின்றும், பாகிஸ்தான் முஸ்லிம் லீகும், கிழக்கு வங்க ஐக்கிய முன்னணியும் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையும் அறவே அகன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மாநில மாநாட்டு நிதி

தஞ்சை மாவட்டம் வழிகாட்டுகிறது

மாநில மாநாட்டு நிதிக்காக, தஞ்சை மாவட்டம் வாக்களித்த பங்குத் தொகையை தலைமைக் கழகத்திடம் சேர்ப்பித்துவிட்டது.

மாயவரத்தில், தஞ்சை மாவட்டச் செயலாளரிடம், அண்ணா அவர்கள், 'வளமான தஞ்சை மாவட்டம், கேட்டுத் தந்த தொகை போகத் தானாக மேற்கொண்டு நிதி தர முன்வர வேண்டும்,' என்று சுட்டிக்காட்டியதற்கிணங்க, மேற்கொண்டு ரூ. 1,000 தரும் முயற்சியில், தஞ்சை மாவட்டம் ஈடுபட்டிருக்கும் செய்தி மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இதுவரையில் தந்திருக்கும் தொகை ரூ. 2,009—12—6.

சென்னை மாவட்டம் ரூ. 5,000 அளவுக்குக் கொடுக்க விரும்பி அதற்கான முயற்சிகள் எடுத்து, இதுவரையில், ரூ. 1,915—8—6 திரட்டித் தந்திருக்கிறது. சென்னை மாவட்டத்திலுள்ள எல்லா கிளைகளும் பாக்கித் தொகை முழுவதையும் திரட்டுவதற்கான செயல் முறைகளில் ஈடுபட்டுச் சென்னை மாவட்டத்திற்கு வெற்றியையும், புகழையும் தேடித்தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திருச்சி மாவட்டம் கெண்டையைப் போட்டு வராலை இழுக்கும் நோக்கத்தில் ரூ. 2,000 கொடுத்து மாநில மாநாட்டையே நடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும், இதுவரையில் ரூ. 1,701—0—0தான் திரட்டித் தந்துள்ளது. பாக்கியை விரைவில் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு மேற்கொண்டும் தருவதற்கு முயற்சிக்கும் என்றும் கருதுகிறோம்.

மற்ற சில மாவட்டங்கள் ரூ 1,000-க்குக் குறைவாகத்தான் தந்திருக்கின்றன; வேறு சில மாவட்டங்கள் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

மாநில மாநாட்டு நிதி முழுவதும் எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாகத் தலைமைக் கழகம் வந்துசேருகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாக மாநில மாநாடு நடைபெறுவதற்கான நிலைமை ஏற்படும். நிதி வந்துசேர காலத் தாழ்க்குமேயானல், மாநாடு நடைபெறுவதும் காலத் தாழ்க்கக்கூடும்.

பின் தங்கிய மாவட்டங்கள், விரைவில் நிதி திரட்ட முயலும் என்றும், கிளைக் கழகங்களெல்லாம் வேண்டிய எல்லா ஒத்துழைப்பையும் மாவட்டக் கழகங்களுக்குத் தரும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

"அறிவகம்" சென்னை
1—7—55

பொறுப்பாளர்,
தலைமை நிலையம் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—7—'55 வெள்ளி

குரல் கொடுக்கும் கோபாலர்கள்

ஐந்தாண்டு திட்டத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் தென்னாட்டிற்கு இழைத்துள்ள அநீதியை, திராவிடர் இயக்கத்தவர் மட்டுமின்றி—'தென்னாடு-வட நாடு என்று பிரித்துப் பேசி, இந்தியாவின் 'ஐக்கிய'த்திற்கு இந்தியாவில் வாழும் பல்வேறு சகோதர (!) தேசிய இன (?) மக்களிடையே நிலவும் ஒற்றுமைக்கு(!) வேட்டு வைப்பவர்கள்' என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்படும் நாம் மட்டுமின்றி—'ஏக இந்திய' அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களில் ஓரளவேனும் நியாய உள்ளம் கொண்டோரும் கண்டித்திருக்கின்றனர்; குரல் எழுப்பியிருக்கின்றனர் — என்பதை நாம் பன்முறை இதற்குமுன் எழுதியுள்ளோம்.

தாங்கள் மட்டுமே விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்துடன் 'பிரத்தியட்ச' நிலைகளை உணர்ந்து, பிரச்சினைகளுக்குப் பரிகாரமும், அரசியல் விளைவுகளுக்கு வியாக்கியானமும் தருபவர்கள் என்று தம் பட்டமடித்துக்கொண்டு—'தவறான பாதையைத் தலைமை காட்டிவிட்டது; தவறிவிட்டோம் அப்போது. இப்போது திருந்திவிட்டோம்' என்று கூறிக்கொண்டு, தப்புக் கணக்குப் போடுவதையே தமது அரசியல் நடைமுறைக் கொள்கையாகக் கொண்டுள்ள சிலரின் 'அகில நோக்கக் கண்களு'க்குத் தவிர வேறெல்லோருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னாட்டினருக்கு வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் பகிரங்கமாகச் செய்த கொடுமை, தெள்ளெனத் தெரிந்துதான் இருக்கிறது என்பதை உறுதி செய்யும் வகையில், ஆந்திர முதன் மந்திரி சென்னையில் பேசியிருக்கிறார், என்று செய்தி என்று கூறுகிறது.

'அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை, ஆந்திர மாநிலங்களுக்கு நீதி, நியாயம் வழங்குக; குறிப்பாகத் தொழில் துறையில் தென்னாட்டவருக்கு உரிய பங்கு தருக' என்று கூறினாராம் ஆந்திர முதல்வர்.

'சுதேசமித்திரன்' மீண்டுமோர் கேலிச் சித்திரம் வரைந்து—கோபாலரும் சுப்பிரமணியனாரும், மூடியிருக்கும் விடாகக் காட்சி தரும் திட்டக் குழுவை சுத்தியல் கொண்டு தாக்குவதுபோல் 'இடிமேல் இடி' என்ற தலைப்புடன்—கோபாலரின் கருத்தை நிலைநாட்டியிருக்கிறது.

சென்னைக்கும் ஆந்திரத்திற்கும் நீதி வழங்கவேண்டும், நியாயம் கிடைக்க வேண்டும் என்று கூறினால் என்ன பொருள்? இதுவரை—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்—நீதி கிடைக்கவில்லை — நியாயம் வழங்கப்படவில்லை என்பது தானே!

'இரண்டாம் திட்டத்திலேனும் உரிய பங்கு தருக' என்றால் முதல் திட்டத்தில் உரிய பங்கு கிடைக்கவில்லை என்பது தானே பொருள்?

'நீதி வழங்குக; உரிய பங்கு தருக' என்று கூறிய காங்கிரஸ் மந்திரிசபையின் முதல்வர் கோபாலர், பழுத்த 'தேச பக்தர்'—'ஏக இந்தியா'வில் அசையாத நம்பிக்கை கொண்டவர் என்பதில் காங்கிரஸ்காரர்களுக்கு சந்தேகமிருக்க முடியாது. அவர் கூறியிருக்கிறார் அப்படி.

அவர் கூறியதனை விரித்துப் பொருள்கூறி மகிழ்ச்சியுற அல்ல, நாம் இதை எழுதுவது.

சென்னையும், ஆந்திராவும் சேர்ந்து டெல்லி ஆட்சிப் பீடத்தவரிடம், 'எஜமானரே எங்களை ஏன் புறக்கணித்தீர்—எல்லோரும் ஒன்றுதான்—பாரதப் புதல்வர்கள்தான்—இந்த நாட்டு மன்னர்கள்தான்என்று கூறினீர்களே; ஆனால் நீங்கள், தென்னாட்டவர் கண்களில் சுண்ணாம்பும், வடநாட்டவர் கண்களில் வெண்ணெயும் வைக்கும் ஓரவஞ்சனை புரிய நாங்கள் காரணமாக இருந்ததாக எங்களை எங்கள் நாட்டவர் இகழுகின்றனரே! ஏன் இப்படி நடந்துகொண்டீர்கள். போனது போகட்டும்; முதல் திட்டத்தில்தான் எங்களை மறந்தீர்; எங்கள் பகுதி மக்களை வாழ்விக்கத் தவறிவிட்டீர்; அடுத்த திட்டத்திலேனும் எங்களுக்கு நியாயம் வழங்குங்கள்; நேர்மையாக எங்களுக்குரிய பங்கு தாருங்கள்," என்று முறையிடுவதிலேயே, பலன், நீதி, நேர்மை, உரிய பங்கு கிடைக்குமா, கிடைக்காதா என்பதைக்கூட நாம் இங்கு ஆராய முற்படவில்லை.

'நீதி வழங்க வேண்டும்; தொழில் துறையில் உரியபங்கு வேண்டும்' என்று இன்று பேசுகிறார்களே, சென்னை, ஆந்திர மந்திரிகள். அந்த எண்ணம் ஏன் தோன்றிற்று? நாம் பன்னிப் பன்னி பலகாலமாக, இந்தியப் பேரரசு தென்னாட்டவரை நடந்திவரும் 'முறை' பற்றி எடுத்துக்கூறி வருகிறோம்—எத்தனையோ சம்பவங்களைச் சுட்டிக்காட்டி. சமாதானம் கூறவோ, அல்லது 'தவறு, நீ கூறுவது; திருத்திக்கொள்' என்று ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டவோ எவரும் முன் வந்ததில்லை. மாறாகக் கேலியும் கிண்டலும் கண்டனமுமே செய்துவந்தனர். 'ஐந்தாண்டு திட்ட அக்கிரமத்தை' நாம் சுட்டிக்காட்டியபோது வாயடைத்துப் போயினர். ஒருவர் பின் ஒருவராக இதமாகவும் பதமாகவும், இழுத்தாற்போலும், இலைமறை காய்மறையாகவும் கூறமுற்பட்டனர். இப்போது 'நீதி வேண்டும் நியாயம் வழங்குக' என்று குரல் எழுப்புகின்றனர்.

கோபாலர்களின் இந்தக் குரல் இந்த நாட்டு மக்களுக்குச் சொல்வதெல்லாம், 'தென்னாடு இந்தியப் பேரரசின் அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது; அபிவிருத்தித் திட்டங்களில், நியாயமாக இந்தியப் பேரரசு நடந்து கொள்ளவில்லை; சென்னைக்கும் ஆந்திரத்திற்கும், இதர தென்னாட்டு மாநிலங்களுக்கும், நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிய பங்கு, முதல் திட்டத்தில் கிடைக்கவில்லை' என்பதை மட்டுமின்றி, கழகத்தார் கூறிய போது 'தேச நலனுக்கு விரோதமான குரல்' என்று குற்றஞ்சாட்ட முற்பட்டவர்கள், கோபாலர்கள் கூறும்போது மட்டும் 'நாட்டுநலனில் அக்கரை கொண்டவர் கருத்து' என்று கூற முற்படுபவரும் இருந்தால் அவர்கள் எல்லாம், 'அரசியலில் பொய் மூட்டை வியாபாரிகள்' என்பதையும் சேர்த்துத் தான்.

'கோபாலர்கள்' குரல் கொடுக்கிறார்கள், காலம் கடந்து. நாம் போர் தொடுக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம், அநீதி இழைத்தவர்களை—அக்கிரமக்காரர்களை - நமக்குரிய பங்கினை தாங்களே உண்டவர்களை--ஓரவஞ்சக நெஞ்சம் கொண்டோரை—அந்த வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து! வேறுபாடு அது தான்.

கோழிப்பண்ணை அபிவிருத்தி

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் 25 - கோழிப் பண்ணை அபிவிருத்தி நிலையங்கள் ஆரம்பிப்பதென சென்னை மாநில சர்க்கார் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

தற்போது, சென்னை, சேலம், தென்கன்னடம், மலபார் ஆகிய நான்கு மாவட்டங்களில் 4 கோழிப் பண்ணைகளும், தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், தென்கன்னடம் மாவட்டங்களில் 4 உற்பத்திப் பண்ணைகளும்இருந்துவருகின்றன.

உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பண்ணையிலும் 100 அந்நிய சாதிக் கோழிகளை வளர்ப்பதென்றும், அடுத்த ஐந்தாண்டுகளில் கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கையை 1,000 - ஆக உயர்த்துவதென்றும், ஒவ்வொரு 'டெவலெப்மென்ட் பிளாக்'கிலும் 100 ரயத்துக்களுக்கு குறைந்த விலையில் ஒரு 'புது ரக'ச் சேவலும், 2 கோழிகளும் சர்க்கார் விநியோகிப்பதென்றும்முடிவுசெய்யப்பட்டுளது.

குடி உரிமை வழங்குவதில் தகராறு முற்றுகிறது!

இலங்கைவாழ் திராவிடர்கள் நாடற்றவர்களாக்கப்படுகின்றனர்!

கொழும்பு, ஜூன் 29—

டெல்லி ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, இலங்கையில் வாழும் இந்தியர்கள் இந்தியக் குடி உரிமை கோரி மனுச் செய்துகொண்டதில் எவருடைய மனுவும் இதுவரை நிராகரிக்கப்படவில்லை என்றும், கடந்த ஆண்டு ஜனவரியிலிருந்து இந்த ஆண்டு மே திங்கள் வரையில் 9,851 பேர் மனுச் செய்தனர் என்றும், இவர்களில் 8,261 பேர்களுக்கு இந்தியக் குடி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்றும், 1,590 பேர்களது மனுக்கள், மேலும் விசாரணைக்காக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்றும் இந்தியத் தூதுவராலயம் வெளியிடும் தகவல், 'இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் இந்தியத் தூதுவராலயம் ஒத்துழைப்பதில்லை,' என்ற இலங்கை அதிகாரிகளின் குற்றச்சாட்டைப் பொய்ப்பிக்கிறது என்று கூறப்படுகிறது.

'ஆனால், இலங்கை சர்க்கார், இதே காலத்தில் சுமார் 2,113 மனுக்களை ஏற்றுக்கொண்டதுடன், 7,167 பேருக்கு மட்டுமே இலங்கைக் குடிஉரிமை வழங்கியிருக்கிறது; 31,300 மனுக்களை நிராகரித்ததின் மூலம் 1,00,320 பேர்களை நாடற்றவர்களாக ஆக்கியுள்ளது."

என்றும் இந்தியத் தூதுவர் அலுவலகம் வெளியிடும் தகவல் கூறுகிறது.

மேலும், ஒப்பந்தத்தின் ஷரத்துக்களில் சிலவற்றில் எழுந்துள்ள தகராறுகளுக்கு இந்தியாவிடம் விளக்கம் கோர இலங்கை முடிவு செய்திருப்பதாகச் செய்தி வந்ததல்லவா? அதற்கான முயற்சிகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லையாம்.

சிலர், 'மீண்டும் ஒருமுறை கொத்தலாவலையும், பண்டித நேருவும் சந்திக்கக்கூடும்,' என்று கருதுகின்றனராம். இம்முறை, அவர்கள், கொழும்பில் சந்திக்கலாம் எனக் கூறப்படுகிறது.

☆

உயிரற்று விட்டதாம்!

இந்திய-இலங்கை ஒப்பந்தம்பற்றி டெல்லி வட்டாரக் கருத்து

'இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றி நேருவும், கொத்தலாவலையும் மேற்கொண்ட ஒப்பந்தம் இப்போது வெறும் உயிரற்ற சாசனமாகி விட்டது என்றும், இரு பிரதமர்களும் மீண்டும் சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றும் டெல்லி வட்டாரங்கள் கருதுகின்றன.

இலங்கை ஒப்பந்த ஷரத்துக்களில் இரண்டு பிரிவு குறித்து விளக்கம் கேட்கப் போவதாக அறிவித்தபடி தங்களுக்கு இன்னும் அந்தக் கோரிக்கை வந்தபாடில்லை என்று கூறப்படுகிறது

பெரான் சர்க்காருக்கு 'வெற்றி முகம்' தெரிகிறது

தேவாலய ஆதிக்கம் அழிகிறது?

அர்ஜெண்டைனா தகராறு பற்றி பேச்சுவார்த்தை

அர்ஜெண்டைனா குடியரசுத் தலைவர் பெரான் சர்க்காருக்கும், ரோமன் கத்தோலிக்க தேவாலய அதிபர்களுக்குமிடையில் கடந்த ஏழு மாத காலமாக நீடித்துவரும் தகராறுகள், பேச்சுவார்த்தைகளினால் சமரசம் செய்யப்பட்டு முடிவுறக்கூடும் என்று கூறப்படுகிறது.

கத்தோலிக்கர்கள் தங்கள் நம்பிக்கைப்படி நடக்க அனுமதிக்கப்படக் கூடும் என்றும் தெரியவருகிறது

கத்தோலிக்கர்களும் தங்கள் 'சுருதி'யைக் குறைத்துக்கொள்ள சம்மதித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதிகாரபூர்வமாக — அரசாங்க தேவாலயமாக, கத்தோலிக்க தேவாலயம் இருந்த நிலைமை அழிந்து போய்விட்டதை, தாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதாகவும் கூறப்படுகிறது.

தங்களது 'தார்மீக'க் கொள்கைகளில் கை வைக்காமல், தங்களுக்கும், அரசாங்கத்திற்குமிடையில் இருந்துவரும் பொருளாதாரத் தொடர்பைத் துண்டித்துக்கொள்வதைத் தாங்கள் எதிர்க்கப்போவதில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலை, பெரான் சர்க்காருக்கு ஒரு பெரும் வெற்றியாகவே அமையும் என விஷயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றனவாம்

அரசாங்கத்திற்கும் — தேவாலய அதிபர்களுக்குமிடையில் சீக்கிரமே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்!

வடவரைச் சாடுகிறார் கோபாலர்

நியாயம்வழங்குக; திட்டத்தில் உரிய பங்கு தருக

ஆந்திர முதன் மந்திரி கோரிக்கை

"இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்-குறிப்பாகத் தொழில் அபிவிருத்தித்துறையில் சென்னை, ஆந்திரம்ஆகியமாநிலங்களுக்கு 'நியாயம்' வழங்கப்படவேண்டும்; அந்தந்த மாநிலங்களுக்குரிய பங்கு கொடுக்கப்படவேண்டும்."

என்று ஆந்திர மாநில முதலமைச்சர் கோபால் ரெட்டி வலியுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

மக்களிடையே 'ஓரளவு நிச்சயமற்ற நிலை'யை உண்டுபண்ணியுள்ள நிலச் சீர்திருத்தப் பிரச்சினையில் விரைவிலேயே முடிவுகாணப்படும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திட்டத்தின் 'பெரு நோக்கு'

தேஷ்முக் விளக்கம்

பம்பாய், ஜூன் 30—

"தேசிய வருமானத்தை இரண்டு மடங்காக்குவதும், 100 முதல் 120 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்படி செய்வதுமே இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த இரண்டு இலட்சியங்களும் ஈடேறும் வழியில் எந்த ஒரு நபர் திட்டம் தயாரித்துக் கொடுத்தாலும், அதனை சர்க்கார் 'மகிழ்ச்சியுடன்' ஏற்றுக்கொள்ளும்,"

என்று, மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக், பம்பாயில் கூறியிருக்கிறார்.

"இந்த இரண்டாவது திட்டம் 'கம்யூனிசத் தன்மை' வாய்ந்ததாகவோ, அல்லது 'சோஷலிச'த் தன்மை பெற்றதாகவோ இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நடுநிலைமையாளர் நியமனம்

நியூயார்க், ஜூன் 29—

இனபேதக் கொள்கைப் பிரச்சினை சம்மந்தமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் தென்னாப்பிரிக்காவுடன் எழுந்துள்ள விவகாரத்திற்கு நடுநிலைமையாளராக பிரேசிலைச் சேர்ந்த லூயி - டி - பாரோ என்பவர், ஐ. நா. சபை பொதுச் செயலாளர் ஹமர்ஸ்க்ஜோயல்டால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த நடவடிக்கை, மேற்கூறிய மூன்று நாடுகளுக்கும் இடையே சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான முயற்சிகளனைத்தும தோற்றுப் போனதையொட்டியே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பண்பட்ட மக்களிடம் பகை கொண்ட பழங்குடி மக்கள்

தொடர்புகொள்ள அந்தமானுக்கு தூதுக் குழு: இந்திய சர்க்கார் ஏற்பாடு

தென் அந்தமான் தீவுகளில் வசிக்கும் 'ஜாராவே' என்ற ஒரு வகுப்புப் பழங்குடி மக்களுடன் தொடர்பு கொள்ளுவதற்காக இந்திய சர்க்காரின் மனித சமூக வரலாற்று ஆராய்ச்சி இலாகாவினர் தூதுக் குழு ஒன்றை சீக்கிரமே அனுப்பத் திட்டமிட்டிருக்கின்றனராம்.

இந்த வகுப்பினர்தான், இந்திய மண்ணில் வாழ்பவர்களில் மிகக் கொடூரமானவர்கள் என்று கூறப்படுகிறது.

தூதுக் குழுவினர் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கையில், அவர்களது உயிரையும் இழக்க நேரிடலாம்; ஏனெனில் இதற்கு முன்பு அத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அந்த வகுப்பினர், தங்களை நெருங்கியவர்களை அம்புகளால் தாக்க முற்பட்டனராம்.

இந்திய சர்க்கார், காலப்போக்கில், அந்தமான் தீவுக்கூட்டத்தில் வேறொரு தீவான வடக்கு செந்தினெல் எனுமிடத்தில் வாழும் பழங்குடி மக்களுடன் தொடர்பு கொள்வதற்காக வேறொரு குழுவை அனுப்பக்கூடும் என்றும் கூறப்படுகிறது இந்த மக்களும், மேற்கூறியவர்களைப் போலவே நாகரீகமடைந்த மக்களுடன் பகை கொண்டவர்களாம்!

இந்த இரு வகுப்பு பழங்குடி மக்களுடன் மட்டும்தான் மனித சமூக வரலாற்று ஆராய்ச்சி இலாகா தொடர்புகொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிகிறது.

அந்த இலாகா ஏற்கனவே அந்தமானில் வாழும், 'ஓங்கே' என்ற மிகப் பழமையான மக்களுடன் தொடர்புகொண்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த 'ஓங்கே' மக்களுடைய இரத்தம் பரிசோதிக்கப்பட்டதில், இதுகாறும் அவர்களைப் பற்றி நம்பப்பட்டபடி, ஆப்பிரிக்க நீக்ரோவருடன் ஒப்பிடக்கூடியவர்கள் என்பதற்கு மாறாக, அவர்கள், ஓஷியானியா பகுதிவாழ் மக்களுடன் அதிக இன ஒற்றுமை கொண்டவர்களாக இருக்கக்கூடும் என்று யூகிக்கவேண்டியிருக்கிறதாம்.

வடக்கும் — தெற்கும்

'நூருல் இஸ்லாம்' கருத்து

"பம்பாய், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பெப்சு, மத்திய பாரத், விந்தியப் பிரதேசம், போபால் முதலிய வடநாட்டு மாநிலங்களில் கோதுமை விலை வீழ்ச்சியடைந்தபோது, அவ்விவசாயிகள் நஷ்டமடையாதிருக்க மத்திய சர்க்கார் மணங்கு ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் கொள்முதல் செய்து உதவி செய்தது;

"இப்பொழுதும் அம்மாநிலங்களில் கொள், கடலை, உளுந்து போன்ற பயிறுகளின் விலை வீழ்ச்சியடைந்துவிட்டதால் அவற்றை இந்திய சர்க்கார் மணங்கு ஒன்று ரூ. 6 வீதம் கொள்முதல் செய்து வடநாட்டு மக்கள் கஷ்டப்படாமல் பார்த்துக்கொள்கிறது;

"ஆனால், தென்னாட்டில் சில மாதங்களுக்கு முன், நெல் விலை சரிந்தபொழுது வாயே திறக்கவில்லை—இந்த இந்திய சர்க்கார்!

"நம் மாநில சர்க்கரோ, தாங்கள் வகிக்கும் மந்திரிபோன்ற பதவிகள், அவர்கள் கொடுத்த 'பிச்சை' என்று நினைத்துக்கொண்டும், பதவி போகாமலிருக்கவேண்டுமே யென்று பயந்துகொண்டும் சும்மா இருந்துவிட்டது - மக்கள்கொடுத்த ஓட்டை மறந்துவிட்டு!

"இப்படிக் காரியங்கள் நடந்தால், 'வட நாடு வேறு—தென்னாடு வேறு' என்று யார்தான் சொல்லாமலிருக்க முடியும்? இப்படியே நடந்தால், அது இன்றில்லாவிடினும் நாளை பிரிந்துதானே போகும்?"

இந்தியாவில் புகையிலை ஏற்றுமதி

ஏறுமுகத்தில் உள்ளது

புதுடில்லி, ஜூன் 28—

இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி 1939—40-ல் ரூ. 1.8 கோடி மதிப்புள்ள 576 இலட்சம் பவுண்டாக இருந்தது. 1950—51-ல் சுமார் 13 கோடி ரூபாய் மதிப்புள்ள 930 இலட்சம் பவுண்டாக உயர்ந்துள்ளது.

காமன்வெல்த் நாடுகளிலேயே இந்தியாவில்தான் அதிகமான அளவு ஏகர் நிலப் பரப்பில் புகையிலை பயிரிடப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் புகையிலையில் 42 சத விகிதத்திற்கு மதிகமாக சென்னை, ஆந்திர மாநிலங்களில் பயிரிடப்படுகின்றன.

சிகரெட் தயாரிக்கும் புகையிலை முழுவதும் ஆந்திராவில்தான் விளைகிறது.

பம்பாயில் 29 சத விகிதம் உற்பத்தியானலுங்கூட, எல்லாம், பீடி தயாரிக்க உபயோகமாகும் புகையிலைதான் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் புகையிலையில் பெரும் பகுதி, தரமான புகையிலைப் பொருள்கள் உற்பத்திக்கு லாயக்கற்றனவாகவும், உள்நாட்டு உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுவனவாகவுமிருக்கின்றன. இந்த புகையிலை, வாய்ப் புகையிலையாகவும், 'ஹூக்கா' முதலியனவற்றிற்காகவும் உபயோகிக்கப்படுகின்றன.

சுமார் 22 சிகரெட் தொழிற்சாலைகள் இருப்பதன்றி, சுருட்டு தயாரிப்பதில் ஓரிரண்டு பெரும் தொழிற்சாலைகள் ஈடுபட்டிருக்கின்றன.

புகையிலைப் பொருள் உற்பத்தி செய்ய வேண்டுவது இன்றியமையாத ஒரு உள்நாட்டுத் தொழிலாகும்.

1950—51-ல், 2,600 கோடி சிகரெட்டுகள் (ரூ. 52 கோடி மதிப்பு), 500 இலட்சம் சுருட்டு (ரூ. 37.5 இலட்சம் மதிப்பு), 11,000 கோடி பீடிகள் (ரூ. 53.5 கோடி மதிப்பு), 'ஹூக்கா' புகையிலை 14 கோடி பவுண்டு (ரூ. 7.5 கோடி மதிப்பு), வெற்றிலையுடன் போடும் புகையிலை 1,430 இலட்சம் பவுண்டு (ரூ. 20.5 கோடி மதிப்பு), பொடி 529 இலட்சம் பவுண்டு (ரூ 2 கோடி மதிப்பு), 46,960 இலட்சம் செரூட் (ரூ. 5.8 கோடி மதிப்பு) என்ற அளவில் புகையிலைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன

பாகிஸ்தான் சம்மதிக்காதாம்!

"காஷ்மீரைத் துண்டாடுவதற்கு பாகிஸ்தான் சம்மதிக்காது; இந்தப் பிரச்சினையில் ஐ நா. சபைத் தீர்மானத்தையே பின்பற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் சம்பந்தப்பட்டவரையில் வேறு எந்தவிதமான முடிவும் இல்லை"

என்று பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

"காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் சேருவதா அல்லது பாகிஸ்தானுடன் சேருவதா என்பதை, நியாயமான வாக்கெடுப்பு ஒன்று நடத்தி, காஷ்மீர் மக்களே முடிவு செய்யவேண்டும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

புலியிடமிருந்து தப்ப!

சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்கு தீ

இரு சமூக சேவகிகள் உயிர் தப்பினராம்

ஜபல்பூர், ஜூன் 29—

இரண்டு கிராம 'சேவகிகள்' கடந்த ஞாயிறன்று, பர்கி சமூக நல முகாமிலிருந்து கிராமம் ஒன்றுக்குச் சேவை செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றனர்.

வழியில் சாலை எதிரே ஒரு புலி நின்றுகொண்டிருந்ததைக் கண்டனர்' என்ன செய்வார்கள் பாவம்?

ஒருவரின் சமயோசிதத்தின் பேரில், தங்களிடம் இருந்த சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்குத் தீ மூட்டினர். புலியும் தீயைக் கண்டதும் அந்த இடத்தைவிட்டு நழுவி விட்டதாம்.

இந்த இருபெண்களும், புலிக்கு இரையாகாது தப்பித்தோம் என்று, ஓடோடியும் தங்கள் முகாம் வந்தடைந்தனராம். தங்கள் தஸ்தாவேஜுகளைக் கொளுத்தியது பற்றி, அவர்கள் தங்கள் அதிகாரிகளிடம் தகவல் அறிவித்துவிட்டனராம்.

அர்ச்சகர்கள் போக்கிற்கு!

திருவள்ளுவர் கழகப் பேரவை கண்டனம்

மதுரை, ஜூன் 30—

"தமிழ் நாட்டு அர்ச்சகர்கள் மாநாட்டில், தமிழில் அர்ச்சனை செய்ய இயலாதென்றும், அதனை ஆக்கித் தருவோர் இல்லையென்றும் கூறப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறது; தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவில்களிலெல்லாம் தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெறுவதற்காக பெருங் கிளர்ச்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ் பெருங்குடி மக்களைக் கேட்டுக் கொள்கிறது"

என்று, மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் பேரவைக் கூட்டம் திரு முத்துசாமி புலவர் தலைமையில் நடைபெற்றபோது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'ஆக்ஸ்போர்ட்,' 'சேம்பர்ஸ்' ஆங்கில அகராதிகள் போன்று தமிழ்சொற்களுக்கு நேரிடையான ஆங்கிலச் சொற்களும், ஆங்கிலச் சொற்களுக்கு நேரிடையான தமிழ் சொற்களும் கொண்ட அகர வரிசை நூல்களை அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்தே வெளியிடுமாறும், பல்கலைக் கழக நிகழ்ச்சிகளை யெல்லாம் தமிழிலேயே நடத்துமாறும், திருவள்ளுவர் திருநாளை, தைத் திங்கள் மூன்றும் நாளில் சிறப்பாகக் கொண்டாடச் செய்யுமாறு ஆவன செய்யும்படியும் அண்ணாமலை பல்கலைக் கழகத் துணைவேந்தரை வேண்டிக் கொண்டும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும், பள்ளிக்கூடங்களில் பாட நூல்களை, ஆங்கில கலைச் சொற்களையும், ஆங்கில மொழிப் புத்தகங்களையும் துணைகொண்டு தமிழ் மொழியிலேயே கற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள் செய்ய கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

காப்பி ஏற்றுமதி வரி ரத்தாகிறது

புதுடில்லி, ஜூன் 30—

காப்பிக் கொட்டை மீது அந்தர் ஒன்றுக்கு ரூ 21 வீதம் இருந்து வரும் ஏற்றுமதித் தீர்வையை இந்திய சர்க்கார் உடனடியாக ரத்து செய்துவிடத் தீர்மானித்துள்ளதாக மத்திய சர்க்கார் வர்த்தக, தொழில் இலாகா காரியாலய அறிவிப்பொன்று தெரிவிக்கிறது.

2,000 படித்த இளைஞருக்கு வேலை!

டெல்லி மாநிலத்தில் சிறு தொழில் துவங்கும்?

மத்திய உள்நாட்டமைச்சர் பந்த் யோசனை

புதுடில்லி, ஜூன் 28—

டெல்லி மாநில சர்க்காரைக் கலந்துகொண்டு, மத்திய சர்க்காரின் வர்த்தக, தொழில் இலாகா ஆறு வாரங்களில் தயாரிக்கும் திட்டம் ஒன்றின்படி துவங்கப்படும் சிறுதொழில்களின் மூலம் ஓராண்டுக் காலத்திற்குள்ளாக சுமார் 2,000 படித்த இளைஞர்களுக்கு வேலைதர முடியும் என ஒரு யோசனையை மத்திய அரசாங்க உள்நாட்டிலாகா அமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் கூறியிருக்கிறார்.

அத்தகைய ஒரு திட்டம், டில்லி மாநிலத்தில் வேலையின்மையைப் போக்க உதவக்கூடியதாக இருப்பது மட்டுமின்றி, பிறமாநிலங்களால் பின்பற்றப்படக் கூடிய முன் மாதிரியானதாகவும் இருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

20-ம் நூற்றாண்டிலும் இந்த எண்ணம்!

ஐதராபாத், ஜூன் 29—

சிங்கரேணி சுரங்கக் கம்பெனியில் வேலை பார்க்கும் சின்னையா என்பவரிடம், நெடுங்காலமாக ஒரு 'கோணி ஊசி' இருப்பதாகவும், இந்த ஊசி தனது 'வாழ்க்கையின் இரகசியம்'—'தனக்கு உணவளிப்பது' என்றும் கூறி அந்தபர், அந்த ஊசியைப் பத்திரமாகப் 'பாதுகாத்து' வருவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அந்த ஊசி, சின்னையாவிடம் 35 ஆண்டு காலமாக இருந்து வருவதாகவும், அதை கோணிப் பைகள் தைக்க உபயோகிப்பதாகவும, தினந்தோறும் இடைவிடாமல் அதைப் பயன்படுத்தி வந்ததால், துவக்கத்தில் 7 அங்குல நீளம் இருந்த அந்த ஊசி 4 அங்குல நீளமாகக் குறைந்துவிட்டது என்றும் அச்செய்திதெரிவிக்கிறது.

தமக்கு எது நேர்ந்தாலும் சரி, தமது 'வாழ்க்கையின் இரகசிய'மாகவும், 'உணவளிக்கும் ஆற்றலும் (!) உள்ள அந்த ஊசியைக் கைவிடுவதே இல்லையென்றும் அக்கபர் உறுதி கொண்டுள்ளாராம்.

ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர்களுக்குப் போனஸ்

ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அல்லது தொழில் நீதிமன்றங்கள் தீர்ப்புகள் எப்படி இருந்தாலும் ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர் 1,20,000 பேருக்கு மேற்பட்டவர்கள், 5 ஆண்டு காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 15 நாள் போனஸ்—அதாவது, ஆண்டு அடிப்படை வருமானத்தில் சுமார் 4½ சதவிகிதம் உத்திரவாதமாகப் பெறுவராம்.

இந்த போனஸ் பிரிவுப்படி, ஆமதாபாத்திலுள்ள 61 ஆலைகளில் வேலை செய்யும் 1,20,000 தொழிலாளர்கள் 1953-ம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 65 லட்சம் பெறுவர்.

80,000 உறுப்பினர்களைக் கொண்ட ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர் சங்கத்தவருக்கும்—ஆலை முதலாளிகள் சங்கத்தவருக்கும் இடையே கையெழுத்தான ஒரு ஒப்பந்தத்தின்படியே இந்த போனஸ் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்காவிட்டால் 45 ஆலைகளின் தொழிலாளர்கட்கு போனஸ் பெற உரிமை கிடையாது. 4 ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் 3 மாத போனஸ் கிடைத்திருக்கும். மேலும் 12 ஆலைத் தொழிலாளர்களுக்கு 3 மாதத்திற்கும் குறைவான போனஸ்தான் கிடைத்திருக்கும்.

பாகிஸ்தான் ஆப்கன் மீது 'பாயும்?'

சமரச முயற்சி முறிந்ததின் எதிரொலி

கொடி அவமரியாதை செய்யப்பட்டதையொட்டி பாகிஸ்தான்—ஆப்கானிஸ்தான் சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்துவைக்க மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகளனைத்திலும் முறிந்துபோனதைத் தொடர்ந்து, தற்போது பாகிஸ்தான் சர்க்கார், ஆப்கன் சர்க்காருக்கு எதிராகக் 'கடுமை'யான திட்டங்களை விரைவிலேயே அமுல் செய்ய இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கடுமையான திட்டங்களை ஏற்பாடு செய்வதில் பாகிஸ்தான் சர்க்கார் அயல்நாட்டு விவகார இலாகா தீவிரமாக முனைந்துள்ளதாம்!

பாக்—ஆப்கன் எல்லையை மூடுதல், ஏற்றுமதி இறக்குமதியாகும் ஆப்கன் பொருட்களுக்குத் தடைவிதித்தல், கராச்சி—காபூல் ஆகிய இடங்களிலிருக்கும் ஆப்கன் தூதராலயங்களை மூடிவிடுதல் மற்றும் இவை போன்ற செயல்களே அத்திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகளாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அருகதையற்றதாம்!

"இப்போது அமைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை பிரதிநிதித்துவமுடையதல்ல; மேற்குப் பாகிஸ்தான் முழுமைக்கும் ஒரே சர்க்கார் அமைப்பதுபோன்ற முக்கியமான முடிவுகள் செய்ய இந்த சபை அருகதையற்றது,"

என்று எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் கூறியிருக்கிறார்.

இப்போதுள்ள அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்கான சட்டதிட்டங்கள் இயற்றி சுதந்திரமான—பாரபட்சமற்ற முறையில் பொதுத் தேர்தல் நடத்தவேண்டுமென்றும், அப்படி தேர்தல்நடத்தி அதன் மூலம் ஏற்படக்கூடிய அரசியல் நிர்ணய சபைதான் பிரதிநிதித்துவம் பெற்றதாக இருந்து, ஜனநாயக அரசியலைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள்

சென்னை நகரில் மேலும் 6 இடம் பெறுகிறது

சென்னை, ஜூன் 29—

சென்னை நகரில் திருவல்லிக்கேணி, சூளை, ஜார்ஜ் டவுன், வியாசர்பாடி, சேத்துப்பட்டு, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில், மேலும் 6 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் திறக்க சென்னை நகரசபைக் கமிஷனர் தெரிவித்த யோசனையை நகர சபையின் சுகாதாரக் குழு அங்கீகரித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் குழு, மேற்கண்ட இவ் வேலைகளைச் செய்ய தேவையான சிப்பந்திகளை நியமிக்கவும், சர்க்காரிடமிருந்து மானிய உதவி பெறவும், அந்த உதவி தரப்படாவிட்டாலும் தொடர்ந்து வேலையை நடத்துவதெனவும் முடிவு செய்துள்ளதாம்.

சென்னை நகரில் அசோக் விகார், சூளை, ஜார்ஜ் டவுன், வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் ஏற்கனவே இந்தகைய நான்கு குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாநில சர்க்கார் தலையில் உயர்நீதிமன்றம் குட்டுகிறது!

'உத்தரவை தட்டிக்கழிக்கும் தவறான போக்கு'

பீகார் சர்க்கார் பற்றி கல்கத்தா உயர் நீதிமன்றம்

"நீதிமன்றத்தின் உத்தரவிலிருந்து தப்புவதற்காக, கபடமான வழியைக் கடைப்பிடித்து குடிமக்களுக்கு, வழிகாட்டக் கூடாது ஒரு அரசாங்கம்," என்று கல்கத்தா உயர்நீதி மன்றம் பீகார் சர்க்காரை எச்சரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

"1952 அக்டோபர் 30-ந் தேதியன்று, பீகார் சர்க்கார், 'கெஜட்'டில்குறிப்பிடப்பட்டுள்ளபடி நடவடிக்கைகள் எதையும் அவர்கள் மேற்கொள்ளக்கூடாது,"

என்று, கல்கத்தா உயர்நீதி மன்றம் ஒரு இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது; அந்த உத்தரவை மீறி தம் மீது பீகார் சர்க்கார் நடவடிக்கை எடுத்ததின் மூலம் நீதி மன்றத்தை அவமதித்ததாக, மகாராஜா பிரவீர்திரமோகன் தாகூர் என்பவர், பீகார் சர்க்கார் மீது வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கில் தீர்ப்பளிக்கையில், செலவுத் தொகை முழுவதையும் வாதிக்குத் தருமாறு நீதி மன்றம் உத்தரவிட்டதுடன், வழக்கை விசாரித்த ஜஸ்டிஸ் பி. பி. முகர்ஜி மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் இடைக்கால உத்தரவை மதிக்காமல், பீகார் சர்க்கார் தமக்குச் சொந்தமான நிலங்களை எடுத்துக் கொண்டதாக வாதி வாதாடினார்.

இந்த வழக்கு பற்றி தீர்ப்பு எதும் கூறவிடினும், வாதியின் வழக்காடும் செலவை முழுவதையும் பீகார் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்.

"நான் இதுபற்றி இந்த நிலையில் எதும் சொல்ல விரும்பவில்லை; ஆனால், சர்க்கார், நீதிமன்றம் உத்திரவிட்டிருக்கும்போது, அதிலிருந்து தப்புவதற்காக தன் சட்டத்தை திருத்தி அமைத்துக்கொண்டு, வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது, விவேகமான செயல் அல்ல; வினைவுகளை ஆராயாமல் செய்யப்படுவதாகும்,"

என்றும் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

"பீகார் சர்க்காரின் வாதம் தகுதியற்றது—ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல" என்றும் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தேனி வருகை

6—7—55 அன்று மாலை, தேனி தி. மு. கழக (கிளை) சார்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும் நடைபெறும். அவ்வமயம், மாநில மாநாட்டுக்கு நிதியளிக்கப்படும்.

சமமான வேலைக்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1000 பீடிகள் சுற்றினால் ஆண்களுக்கு இரண்டு ரூபாய் எட்டணா தரப்படுவதாகவும், ஆனால் பெண்களுக்கு அதே ஆயிரம் பீடி சுற்றுவதற்கு ஒரு ரூபாய் எட்டணா மட்டுமே கூலி தரப்படுகிறது என்றும், குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்வித வேறுபாடும் கற்பிக்கவில்லை என்றும், எனவே தங்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்றும் அவர்கள் முறையிட்டதாகக் கூறப்படுகிறது.

மாவட்ட நீதிபதி அதுபற்றி தாம் கவனிப்பதாக உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது.

பெல்கிரேடில் நேரு

பெல்கிரேட், ஜூலை 1—யூகோஸ்லேவியா நாட்டின் தலைநகரான பெல்கிரேடில் இந்தியப் பிரதமர் நேருவுக்கு பிரமாதமான வரவேற்பொன்று அளிக்கப்பட்டிருக்கிறது.

நேரு விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன், யூகோ தலைவர் மார்ஷல் டிட்டோ அவரை எதிர்கொண்டழைத்து வரவேற்றார்.

யூகோஸ்லேவியாவில், பண்டித நேரு 7 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார் என்று கூறப்படுகிறது.

கள்ள நிறுவைகள்

458 வியாபாரிகள்மீது நடவடிக்கை

சென்னை நகரிலுள்ள கடை வியாபாரிகள், நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கும் குறைவான அளவைகள், நிறுவைகள் ஆகியவற்றை உபயோகிப்பதைக் கண்டுபிடிக்க நகரில் திடீரென போலீசார் சோதனை நடத்தியிருக்கின்றனர்.

சோதனையின் இறுதியில் கள்ள நிறுவைகள் வைத்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்ட 458 வியாபாரிகள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இவற்றுள், சென்னை நகரின் வடபாகத்தில் 165 வழக்குகளும், தென்பகுதியில் 197 வழக்குகளும், மத்திய பகுதியில் 96 வழக்குகளும் உள்ளனவாம்.

அடக்குமுறையில் மாற்றம்

கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசுவராம்

போர்த்துகீசிய போலீசாரின் புது முயற்சி

பெல்காம், ஜூன் 30—கடந்த வாரத்தில் கோவா விடுதலை கோரி போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள்மீது போர்த்துகீசிய போலீசார் தடியடி, துப்பாக்கிக் குண்டுகள் பிரயோகம் செய்த மிருகச் செயல்களுக்கு இந்தியாவில் காட்டப்பட்ட கடும் எதிர்ப்பு காரணமாக போர்த்துகீசிய போலீசார்,இனி, போராட்ட வீரர்கள் கோவா எல்லைக்குள் வராது தடுப்பதற்காக வேறுவகையான அடக்கு முறைகளைக் கையாளுவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

அவர்கள், வாசதார் என்ற ஒரு கிராமத்தில் கண்ணீர்ப் புகை குண்டுகளை உபயோகித்து, வினைவுகளைப் பரிசோதித்தனர் என்றும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கு இரையான மக்கள் அருகில் உள்ள குளங்களுக்குச் சென்று நீரில் மூழ்கி எழுந்தனர் என்றும், குண்டுகளை வெடித்த போலீசாரே அதன் வினைவுகளை அனுபவிக்க நேரிட்டதெனவும் கூறப்படுகிறது.

★

'கோவா விடுதலைப் போரில் மக்கள் சபை உறுப்பினர் கலந்துகொள்வர்'

டாக்டர் லங்காசுந்தரம் அறிவிப்பு

பம்பாய், ஜூன் 30—"பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் குழு ஒன்று கோவா போராட்டத்தில் கலந்துகொண்டு கோவா எல்லைக்குள் நுழையும்," என்று, மக்கள் சபை உறுப்பினருள் ஒருவரான டாக்டர் லங்கா சுந்தரம் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

போர்த்துகீசிய போலீசாரின் அடக்குமுறை வெறிக்கு பலியான அமீர்சந்த் குப்தா என்பவருக்காக நடத்தப்பட்ட 'தியாகி நாள்' கூட்டமொன்றில் பேசுகையில் அவர், "இந்த மக்கள் சபை உறுப்பினர் குழு, கம்யூனிஸ்டான ஏ. கே. கோபாலன் தலைமையில் செல்லும்" என்றும்தெரிவித்திருக்கிறார்.

3 குழந்தைகள் 17 பெண்கள் உட்பட 625 பேர் கைது

அகாலி தளக் கிளர்ச்சியில் ஒரு நாள் நிகழ்ச்சி

அமிர்தசரஸ், ஜூலை 1—சென்ற 28-ந் தேதியன்று இங்கு, ரஞ்சித் சிங்கின் 117-வது பிறந்த தின விழா கொண்டாடப்பட்டதை யொட்டி, அகாலிதளத்தின் பஞ்சாப் மாநில கிளர்ச்சி வலுப்பெற்றதாகவும்,அன்று மட்டும் 3 குழந்தைகளும் 17 பெண்களும் உட்பட மொத்தம் 625 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அகாலிதளத்தவரின் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கிளர்ச்சியின் காரணமாக இதுவரையிலும் 3,974 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இராணுவத் தளபதிகள் விரைகின்றனராம்!

எடனிலுள்ள துருப்புக்களுக்கும்—சுதேசி மக்களுக்கும் சண்டை மூண்டிருப்பதாக வந்துள்ள தகவல்களையொட்டி கிரேசியாவில் உள்ள இராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து பிரிட்டன், மேற்கு ஆசிய இராணுவத் தளபதிகள் ஏடனுக்கு விரைந்துள்ளதாகத் தெரிகிறது.

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜூன் 3: கோவை
4: கரூர்
5: வத்திராயிருப்பு
6: தேனி
7: மணப்பாறை

கழகக் கூட்டம்

சித்தலவாய்

பன்னீர்செல்வம் அரங்கில்

3—7—55 மாலை 6 மணிக்கு தலைவர் : தங்க. தெய்வசிகாமணி

பேசுவோர் :
கி. மனோகரன்
சி. மதியன்பன்

ஆமதாபாத் தி. மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. இம்மாநாட்டு ஆரம்ப வேலைகளுக்கு ரூ. 25,000 கேட்டுக்கொண்ட தலைமைக் கழகத்தின் வேண்டுகோள்படி மாவட்டங்கள் தோறும் நிதி வசூலித்துத் தரப்படுகிறது.

"ஆனால், ஆமதாபாத் தி. மு. கழகமும், மாநில மாநாட்டு நிதியின் ஆக்க வேலையில் ஈடுபடாதது கண்டு கழகத் தோழர்கள் பலர் அஞ்சல் மூலமாகவும், நேரில் கண்டும் காரணம் கேட்கிறார்கள்.

"இன்று, நாம் முன்னைவிட மிகவும் வளர்ந்துள்ளோம்; மக்கள் ஆதரவும் நமக்கு அதிகமுண்டு. எனவே, நாம், முதல் மாநில மாநாட்டுக்குச் செலுத்தின தொகையைவிட இப்போது அதிகம் செலுத்த வேண்டியுள்ளோம். இந்த மாநில மாநாட்டிற்கு நமது பங்காகக் குறைந்தது ரூ. 400 செலுத்த வேண்டும்.

"எனவே, இது பற்றி அந்தந்த பகுதி கழகத் தோழர்களின் கூட்டு யோசனைக்கிணங்க, வருகிற 10-7-55-ல் ஆமதாபாத் தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக் குழு, உண்டியல் மூலம் நிதி வசூலிக்கும். அதுபோது, அவ்வப்பகுதி தோழர்கள் நிதிக் குழுவுடன் ஒத்துழைத்து, மனமுவந்து, நிதி தந்துதவ வேண்டுகிறேன். நிதி அளிக்கும் தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், கழகச் சின்னம் (தி. மு. கழக இரு வர்ணக் கொடி) தரப்படும்,"

என்று, ஆமதாபாத் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஆர். டி. அசலம் தெரிவிக்கிறார்.

நிதிக் குழு சுற்றுப்பயணம் :

10—7—55 : காலை 7 மணி முதல் 10 மணி வரை; சமான்பூர்;

பகல் 11 மணி முதல் 2 மணி வரை: மணிநகர், மோதிநகர்;

பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை: பாபுநகர்;

மாலை 6 மணி முதல் 9 மணி வரை: நரோடா.

சென்னை கல்விச் சங்கம்

3—7—55 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில், 'வள்ளுவர் கண்டநாடு' என்னும் பொருள் பற்றி, திரு. த.வே முருகேசனார் தலைமையில், திரு. வி சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவார்.

பொதுக்கூட்டம்

3—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில், கோவா அட்டூழியத்தைக் கண்டிக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். மக்கள் சபை உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும், மற்றும் பல தலைவர்களும் கலந்துகொள்வார்கள்.

பெங்களூர் (பிளாக்பள்ளி) தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

3—7—55 காலை 9½ மணிக்கு பெங்களூர்-பிளாக்பள்ளி தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, கழக ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்படும்.

உறையூர் தி. மு. கழகத் தோழர்கட்கு

3—7—55 இரவு 8 மணிக்கு, உறையூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, பல முக்கிய விஷயங்கள் குறித்து முடிவெடுக்கப்படும்.

கடலூர் (ஓ.டி.) 2-வது வட்டக் கிளை தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

3—7—55 இரவு 8 மணிக்கு, கடலூர் (ஓ. டி.) 2-வது வட்டக் கிளை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணி மனையில் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

2—7—55 மாலை 6½ மணிக்கு, சென்னை, இராயபுரம், 59, மன்னார் சாமி கோவில் தெருவிலுள்ள வட சென்னை குறள் நெறிக் கழக அறையில்,தோழர் காஞ்சி-கல்யாண சுந்தரம் தலைமையில் 'வள்ளுவர் வகுத்த வாழும் நெறி' என்பது பற்றி, தோழர்கள் வீரன், வீராசாவன், முகம்மது அலி, இரா. பாலு, ஆறுமுகம் ஆகியோர் பேசுவர்.

* * *

3—7—55 இரவு 7 மணிக்கு, சென்னை-வண்ணை கே எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் மணிவண்ணன் தலைமையில், 'சமுதாயம்' எனும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

ஐக்கிய கர்நாடக அமைப்பு ஆதரிப்புக் கூட்டம்

3—7—55 மாலை 5½ மணிக்கு, பெங்களூர், அலசூர் எல்ந் ஆபீஸ் அருகில், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும். தோழர் மு. கோ. வேந்தன் பேசுவார்

மாதாந்திர பேச்சு வகுப்பு

2—7—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில், திருமதி டாக்டர் எஸ். தருமாம்பாள் தலைமையில் நடைபெறும். திரு. மயிலை சிவமுத்து மேற்படி வகுப்பைத் திறந்துவைப்பார். திருமதிகள் ஆர். ஜெஜீஸ்வரி, டபிள்யூ என். ஜெயகுமாரி, டி. அனுசுயா ஆகியோர் பேசுவர்.

திருமணம்

4—7—55 அன்று, ஆரணி வட்டம்-சேவூரில், ஆ. கிருட்டிணன் இல்லத்தில், தோழர் இ. செயராமன்—தோழியர் சகுந்தலா திருமணம், தோழர் பொன்னுர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர் எஸ். ஏ. கைலசன், கே. டி. குப்புசாமி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.